1979 பிப்ரவரி 20]

*வினா எண்: 103—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) புதுக்கோட்டை மாவட்டம் அரிமழம் ஒன்றியப் பகுதியில் உள்ள விவசாயிகளின் மின்சார பம்புசெட்டு களுக்கு மின்இணைப்பு கிடைக்காமல் உள்ளது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) இப்பகுதியில் தற்போதுள்ள 872 கிணறுகளில் ஏற்கனவே 281 கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) மீதமுள்ள கிணறுகளில் 1-7-78 வரை நிலுவையிலுள்ள 255 மனுக்களில் 70 மனுக்கள் நடைமுறையிலும் அனுமதி அளிக்கப்பட்ட திட்டங்களைச் சார்ந்துள்ளன. மீதி 185 மனுக்களுக்கு மின் வாரியத்தின் புதிய கொள்கைப்படி மனுச் செய்துள்ள தேதியின் அடிப் படையில் மட்டும் முன்னுரிமை அளிக்கப்பட்டு மின் இணைப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

காமதேனு சிறப்பங்காடி மூலம் காய்கறி விற்பனை

வினா எண் 104—திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்பு மிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னையில் காமதேனு கூட்டுறவு அங்காடி மூலம் வீடுவீடாகச் சென்று காய்கறி விற்பனை செய்யும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறதா?

(ஆ) மேற்படி திட்டத்தால் வேலை வாய்ப்பு அடைந்தவர்கள் எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:—

(அ) இல்லை.

(ஆ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.